**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போடிநாயக்கனூர்.**

**முன்னிலை: திரு. C. ராஜசேகர், B.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
போடிநாயக்கனூர். [FAC]

2025–ம் ஆண்டு ஜனவரி மாதம் 20–ம் நாள் திங்கள் கிழமை

**IA No. 1/2024 /in/ OS No. 169/2022**

பிச்சை மணி :: மனுதாரர் / வாதி

**/எதிர்/**

1. காசிமாயன்
2. வனராணி :: எதிர்மனுதாரர்கள் / எதிர்வாதிகள்
3. P.பால்சாமி

-------

இம்மனுவானது 10.12.2024–ம் தேதி என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ராஜமோகன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்களுக்கு உரிய முறையில் அழைப்பாணை சார்பு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததன் காரணமாக எதிர்மனுதாரர்களுக்கு எதிராக 06.03.2024–ம் தேதியன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

மனுச் சொத்தினைப் பொறுத்து நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து, சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்து மனுதாரர்/வாதிக்குரிய 2–ல் 1 பாகத்தினை பிரிவினை செய்து இறுதி நிலை தீர்ப்பாணை வழங்கி உத்தரவிடவேண்டி உ.வி.மு.ச. கட்டளை 26 விதி 13–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

RAJASEKAR C
Digitally signed by RAJASEKAR C
Date: 2025.01.20 18:37:11 +0300

2) <u>மனுதாரர் / வாதி தரப்பு மனு உரையின் சுருக்கம்:</u>

வழக்குரைச் சொத்துக்களைப் பொறுத்து மனுதாரர் / வாதி தனக்குரிய 2–ல் 1 பாகத்தினை நயமிடர் பார்த்து பிரித்து தரக்கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கில் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் ஒருதலைபட்சமாக்கப்பட்டுவிட்ட நிலையில், மேற்படி வழக்கில் மனுதாரர் / வாதிக்கு ஆதரவாக 21.11.2023–ம் தேதியன்று தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி தீர்ப்பாணையின்படி வழக்குச் சொத்தில் மனுதாரர் / வாதிக்குரிய 2–ல் 1 பாகத்தினை பிரித்து தர பிரதிவாதிகளிடம் கேட்டும் பிரித்து தர மறுப்பதாகவும், எனவே, நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து தாவா சொத்தில் வாதிக்குரிய 2–ல் 1பாகத்தினை நயமிடர் பார்த்து பிரித்து தரக்கோரி இம்மனுவினை தாக்கல் செய்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) இம்மனுவில் எதிர்மனுதாரர்கள் அனைவரும் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளனர். அதன்பின்னர் இம்மனுவில் வழக்கறிஞர் **திரு. A.பாண்டியராஜ், அவர்களை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து** முதல் நிலை தீர்ப்பாணையில் சொல்லப்பட்டவாறு மனுச் சொத்தில் மனுதாரர்/வாதிக்குரிய 2–ல் 1 பாகத்தினைப் பிரித்து அதனடிப்படையில் அறிக்கை தாக்கல் செய்ய 09.09.2024–ம் தேதியன்று உத்தரவிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நீதிமன்ற ஆணையர் 23.10.2024–ம் தேதியன்று வரைபடத்துடன் கூடிய அறிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

4) <u>நீதிமன்ற ஆணையர் அறிக்கையின் சுருக்கம்:</u>

நீதிமன்ற ஆணையர் தன்னுடைய அறிக்கையில், சார் ஆய்வாளரிடம் மனுச் சொத்தில் கண்ட போடிநாயக்கனூர் கிராமம், சர்வே எண்.1395/2B–ல் கண்ட மொத்தம் 91 செண்ட் நிலத்தினை மனுச் சொத்து விபரத்தில் கண்டுள்ள விபரப்படி அளந்து அதனை இரண்டு சமபிரிவுகளாக பிரிவினை செய்து அதில் ஒரு பகுதியை மனுதாரருக்கு ஒதுக்கும்படி கூறியதாகவும், அதனடிப்படையில் சார் ஆய்வாளர், இரண்டு பாகங்களாக பிரித்து வடக்குப் பக்கம் 45–1/2 செண்டு நிலத்தை சிவப்பு கலரிலும், தெற்கு பக்கம் 45–1/2 செண்டு நிலத்தை நீலக் கலரிலும் பிரித்துக் காட்டியுள்ளதாகவும் கூறியுள்ளார்.

RAJASEKAR C

Digitally signed by RAJASEKAR C
Date: 2025.01.20 18:37:33 +0300

5) **<u>ஆணையர் அறிக்கை தொடர்பான விவாதம்</u>**:

05-01) நீதிமன்ற ஆணையர் அறிக்கையைப் பொறுத்து மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை இல்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் இம்மனுவில் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ள போதிலும், நீதிமன்ற ஆணையர் முறையாக மனுதாரருக்கு அறிவிப்பு சார்பு செய்ததாகவும், எதிர்மனுதாரர்களுக்கு பதிவுத் தபாலில் அறிவிப்பு அனுப்பப்பட்டு, மேற்படி தபால் எதிர்மனுதாரர்களால் பெற்றுக் கொள்ளப்படாதால் திருப்பப்பட்டுள்ளதாகவும் ஆணையர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். மேலும், வழக்குச் சொத்தினை சார் ஆய்வாளர் முன்னிலையில் பார்வையிட்டு அளந்து வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்திருப்பதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

05-02) அசல் வழக்கில் வாதியே பாகப்பிரிவினை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்து அவருக்கு ஆதரவாக முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. முதல் நிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் மனுதாரர் / வாதி தாக்கல் செய்த இந்த நிர் மனுவில் இறுதி நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரப்பட்டுள்ளது. அசல் வழக்கிலும், இறுதிநிலை தீர்ப்பாணை மனுவிலும் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளனர். இருப்பினும், மனுதாரருக்கு 2-ல் 1 பாகம் கிடைக்கத்தக்கது குறித்து பாகம் பிரிக்கப்பட வேண்டுமெனில், வழக்குச் சொத்து பிரிக்கப்பட்டு அப்பாகங்கள் சம அளவில் இருத்தல் அவசியமாகும். அதன்படி பரிசீலிக்கையில் மனுச் சொத்தினை தலா 45-1/2 சென்ட் வீதம் இரண்டு சமபாகங்களாக பிரித்துக் காட்டியுள்ளதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

05-03) மேலும் மனுச் சொத்திற்கு கிழக்கு மாலாக மரிமூர் பிற வாய்க்கால் என்றும், மேற்கு மாலாக தென்வடல் ஒழுகால் பாதை என்றும் குறிப்பிட்டு இருப்பதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது. அதன் அடிப்படையில் மனுச் சொத்தினை தெற்கு மற்றும் வடக்கு பாகங்களாக பிரிக்கப்பட்டு இருப்பதால் இரண்டு பாகங்களுக்கும் பாதை வசதிகள் இருப்பதை இந்நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது.

RAJASEKAR C
Digitally signed by RAJASEKAR C
Date: 2025.01.20 18:37:39 +0300

05–04) மேலும் நீதிமன்ற ஆணையர் அறிக்கையுடனான புல வரைபடத்தில் நீலவண்ண பகுதி மனுதாரருக்கு ஒதுக்கப்படுவதாக குறிப்பிட்டுள்ள நிலையில், மனுதாரர் தரப்பிலும் மேற்படி நீலவண்ண பகுதியை தனக்கு ஒதுக்கி கொடுக்கும் படி வாதத்தின் போது வேண்டப்பட்டு இருப்பதை கவனத்தில் கொண்டு, நீதிமன்ற ஆணையர் அறிக்கையுடனான புல வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள நீலவண்ண பகுதியை மனுதாரருக்கு ஒதுக்கிட இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. அதன்படி நீதிமன்ற ஆணையர் மனுச் சொத்தினை 2 பாகங்களாக பிரித்து அறிக்கை வழங்கியுள்ளதை இந்நீதிமன்றம் ஏற்கிறது. அதன் முடிவாக நீதிமன்ற ஆணையர் அறிக்கை ஏற்புடைய ஒன்று என தீர்மானித்து அதன்படி இம்மனுவினை அனுமதித்திட முடிவு செய்கிறது. மேலும், நீதிமன்ற ஆணையர் அறிக்கை நீ.ம.சா.ஆ.1 ஆகவும், ஆணையர் அறிக்கையுடனான புலவரைபடம் நீ.ம.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**6) முடிவாக,**

**நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தின்படி, மனுச் சொத்தான போடிநாயக்கனூர் சர்வே எண்.1395/2B–ல் கண்ட தாவா சொத்தில் தெற்குப் பக்கம் நீலக் வண்ணமிட்டு காட்டப்பட்டுள்ள 45–1/2 செண்ட் சொத்தை மனுதாரர்/ வாதிக்கு பாகமாக ஒதுக்கி இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.**

06–01) **மேலும், நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடங்கள் இறுதிநிலை தீர்ப்பாணையின் ஒரு அங்கமாக பாவிக்க வேண்டுமென உத்தரவிடப்படுகிறது. நீதிமன்றம் சாரா முத்திரைதாள்கள் தாக்கல் செய்ய இரண்டு மாதகாலம் அவகாசம் வழங்கப்படுகிறது. மேலும் நீதிமன்றம் சாரா முத்திரைத்தாள்கள் தாக்கல் செய்யப்படும் பட்சத்தில் இறுதிநிலைத்தீர்ப்பாணை வனையப்படவேண்டும்.**

RAJASEKAR C

Digitally signed by RAJASEKAR C
Date: 2025.01.20 18:37:45 +0300

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2025–ம் ஆண்டு ஜனவரி மாதம் 20 –ஆம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAJASEKAR C Digitally signed by RAJASEKAR C Date: 2025.01.20 18:37:52 +0300

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**போடிநாயக்கனூர் [FAC]**

**இரு தரப்பிலும் சாட்சி. சான்றாவணங்கள்: இல்லை**

**நீதிமன்ற தரப்பு சான்றாவணங்கள்**

1. நீ.ம.சா.ஆ.1 நீதிமன்ற ஆணையர் அறிக்கை
2. நீ.ம.சா.ஆ.2 நீதிமன்ற ஆணையர் அறிக்கையுடனான புலவரைபடம்.

RAJASEKAR C Digitally signed by RAJASEKAR C Date: 2025.01.20 18:37:57 +0300

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**போடிநாயக்கனூர்[FAC]**

I.A.1/2024
in
O.S. 169/2022
FAIR / DRAFT ORDER
Date : 20.01.2025